மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்

COS . 1–2022

நாள்: 09.02.2026

Deposition of Witness P.W.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரேமா | தகப்பனார் பெயர்<br>கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>

07.01.2020ந் தேதி 1 மற்றும் 2 பிரதிவாதிகள் எனக்கு திருச்சி லட்சுமிவிலாஸ் வழங்கிய கன்டோன்மண்ட் கிளை வழங்கிய காசோலை **வா.சா.ஆ.1**. 07.01.2020ந் தேதி எனக்கு பிரதிவாதிகள் சேர்ந்து எழுதி கொடுத்த ஒப்புகை ரசீது **வா.சா.ஆ.2**. 07.02.2020ந் தேதி பிரதிவாதிகள் எனக்கு எழுதிக்கொடுத்த உறுதிமொழி கடிதம் **வா.சா.ஆ.3**. எனக்கு 1ம் பிரதிவாதி இந்தியன் வங்கி கணக்கில் உள்ள தஞ்சாவூர் தெற்கு பிரதான கிளை பூர்த்தி செய்யப்படாத வழங்கிய காசோலை அசல் **வா.சா.ஆ.4**. எனக்கு 2ம் பிரதிவாதி வங்கி கணக்கு உள்ள பட்டுக்கோட்டை இந்தியன் ஓவர்சிஸ் வங்கிகளில் வழங்கிய பூர்த்தி செய்யபப்படாத காசோலை **வா.சா.ஆ.5**. 2ம் பிரதிவாதி தேதியிடபடாத பூர்த்தி செய்யப்படாத கடனுறுதி சீட்டு **வா.சா.ஆ.6**. 31.05.2017ந் தேதி 1ம் பிரதிவாதிக்கு சொந்தமான தாவா 1வது அயிட்டம் சொத்திற்கான கிரய சாசனம் அசல் **வா.சா.ஆ.7**. 23.02.2017ந் தேதி 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள தாவா 2வது அயிட்டத்திற்கான கிரய சாசனம் புகைப்படங்கள் **வா.சா.ஆ.8**. 16.10.2021ந் தேதியிட்ட எனது வழக்கறிஞர் பிரதிவாதிகளுக்கு கொடுக்கப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு **வா.சா.ஆ.9**. மேற்படி அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை (எண்ணிக்கை 2) **வா.சா.ஆ.10**. 12.11.2021ந் தேதி எனது வழக்கறிஞர் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.11**. 2ம் பிரதிவாதி அறிவிப்பை திருப்பப்பட்டதற்கான அசல் **வா.சா.ஆ.12**. 12.01.2019 முதல் 20.01.2020 வரை எனது பெயரில் நாகப்பட்டினம் கிளை சிட்டி யூனியன்

பேங்க் மேலாளர் எனக்கு கொடுத்த ஸ்டேட்மண்ட் **வா.சா.ஆ.13**. 02.01.2019 முதல் 31.01.2019 வரை நாகப்பட்டினம் ஸ்டேட் பேங்க் ஆப் வங்கி மேலாளர் எனக்கு கொடுக்கப்பட்ட ஸ்டேட்மண்ட் **வா.சா.ஆ.14**. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை:**

கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது